# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 ஆகஸ்ட் திங்கள் 18–ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

குளச்சல் நகராட்சியில் மாதா காலனியில் சுனாமி நிவாரணத் திட்டத்தில் ரூபாய் 30,00,000/– மதிப்பீட்டில் 3,00,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை தொட்டி கட்டும் பணி நடந்து வருகின்றது. மேற்படி மேல்நிலை தொட்டிக்கு தண்ணீர் ஏற்ற வேண்டி மூன்று ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து அதிலிருந்து வரும் தண்ணீரை தரைமட்ட தொட்டி கட்டி அதில் சேமித்து மாதா காலனியிலுள்ள மேல்நிலை தொட்டியில் ஏற்றி விநியோகம் செய்யப்பட வேண்டும்.

ஆனால் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில், போதிய அளவு நல்ல தண்ணீர் இல்லாததாலும், தரைமட்ட தண்ணீர் தேக்கி கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்தில் போதிய இடவசதியும் இல்லாததாலும், மாற்று இடங்கள் தேர்வு செய்யப்பட்டன.

தற்போது சீம்புளிவிளை பாலத்தன்கரை மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில், ஆகிய மூன்று இடங்களில் ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டது. தரைமட்ட தொட்டியானது வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் நகராட்சி ரோட்டு புறம்போக்கு இடத்திலும் அமைக்கப்பட்டது. இதனால் குழாய்களின் நீளமானது மதிப்பீட்டை விட அதிகமாகின்றது.

ஆகவே பம்பிங்மெயின் கூடுதலாக அமைக்கவும், மூலமதிப்பீட்டில் சேர்க்க வி்டுபட்ட சில இனங்களான வால்வுகள், வினியோக குழாய் மற்றும் உதிரிப்பாகங்கள் அமைத்து குடிநீர் விநியோகம் செய்ய உத்தேச மதிப்பீடு ரூபாய் 5,40,000/–க்கு தயாரித்து வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் முடிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 628 : பொது நிதியிலிருந்து இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை (ரூ.5.4 லட்சம்) அனுமதித்திட ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

குளச்சல் நகராட்சி – குடிநீர் பிரிவு ஆழ்துளை கிணறு எண்கள் 6, 8, 11 மற்றும் 12 ஆகியவற்றில் ஆழ்துளை கிணற்றின் உள்ளே அமைந்துள்ள இரும்பு குழாய்கள் துருப்பிடித்து ஓட்டையாகியுள்ளன. இதன் காரணமாக மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு தண்ணீரேற்ற இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உடனடியாக பழுதடைந்துள்ள இரும்புக் குழாய்களை மாற்றிவிட்டு புதியதாக குழாய்கள் சம்மந்தப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் அமைக்கவும், ஆழ்துளை கிணறு எண்கள் 6, 8 மற்றும் 12 ஆகியவற்றில் இயங்கிக் கொண்டிருக்கின்ற 10 குதிரை திறன் கொண்ட நீர்மூழ்கி மின் மோட்டார்களில் பழுது ஏற்பட்டுள்ளதின் காரணமாக குடிநீரின் அவசியம் கருதி சம்மந்தப்பட்ட பழுதுகளையும், உடனடியாக சரி செய்வதற்கும், மேற்படி பணிகளுக்கான உத்தேச மதிப்பீடு ரூ. 47,000/– (ரூபாய் நாற்பத்தி ஏழாயிரம் மட்டும்) –ற்கும், சம்மந்தப்பட்ட பணியினை இந்நகராட்சி குடிநீர் திட்ட பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 629 : அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2008 ஆகஸ்ட் திங்கள் 29–ாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண். 1</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கே.எஸ்.எஸ்.எஸ்.காலனியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டி ஒன்று கட்டப்பட்டு இந்நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி மேல்நிலை நீர்தேக்க தொட்டி மூலம் சம்மந்தப்பட்ட பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் சுமார் 26 வீடுகளுக்கு தண்ணீர் சரியாக சென்று சேராததால் 2" பி.வி.சி. குழாய் தனியாக அமைத்து கேட் வால்வும் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வது தொடர்பாகவும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 15,000/–க்கும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 624 நாள் 28.07.2008–ல் ஒப்புதலளித்ததன் அடிப்படையில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C. சந்திரசேகர் – 0.03% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் (ரு. 13,263. 60)

2) திரு. பி.தங்கமணி, – 16.50% மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் (ரு. 15,457. 00 )

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.
(ந.க.எண்.அ2/6561/2008)
**தீர்மானம் எண். 630 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 2</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான மரமடி–II மற்றும் தெற்கு கள்ளியடைப்பு ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள சத்துணவு மையங்களுக்கு குடிநீர் இணைப்புகள் இல்லை. ஆகவே மேற்படி இரண்டு இடங்களுக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.5000/–க்கும் மன்றம் தனது தீர்மானம் எண். 614 நாள் 28.07.2008–ல் ஒப்புதல் வழங்குதன்பேரில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C. சந்திரசேகர் – 13.15% மதிப்பீட்டைவிட அதிகம்
ஒப்பந்தக்காரர் (ரு. 4681.00)

2) திரு. பி.தங்கமணி, – 0.06% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் (ரு. 4134. 60)

இதில் திரு.பி. தங்கமணி என்பவர் 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. தங்கமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.
(ந.க.எண்.அ2/5881/2008)
**தீர்மானம் எண். 631 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி பகுதியில் கதவு எண். 15/12A, 15/104, 15/108, 15/107, 15/115 ஆகிய வீடுகள் அமைந்துள்ள பகுதிகளிலும், கள்ளியடைப்பு என்கின்ற பகுதியில் கதவு எண். 1/206, 1/208, 1/210, 1/136 மற்றும் 1/138 ஆகிய வீடுகள் அமைந்துள்ள பகுதிகளிலும் குடிநீரில் மாசு கலப்பதாக புகார் வந்ததின் அடிப்படையிலும், குடிநீரானது மிகக் குறைவாகவே கிடைப்பதாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும் சம்மந்தப்பட்ட பகுதிகளை தோண்டி சரி செய்வதற்கும், இதற்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 13,000/– க்கும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 601 நாள் 28.07.2008–ல் ஒப்புதலளிக்கப்பட்டதன் பேரில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C. சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் – 0.09% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. 12848.00)

2) திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் – 4.99% மதிப்பீட்டைவிட அதிகம். (ரூ. 13501. 50 )

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.09% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

(ந.க.எண்.அ2/5547/2008)

**தீர்மானம் எண். 632 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4</u>**

குளச்சல் நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதின் காரணமாக குடிநீர் எடுக்கப்படும் 13 ஆழ்துளை கிணறுகளில் அமைந்துள்ள இரும்புக் குழாய்கள் மற்றும் மின் மோட்டார்களில் பழுதுகள் ஏற்படுகின்றன. ஆழ்துளை கிணறு எண்கள் 3, 4, 7, 8 ஆகியவற்றின் குழாய்களில் ஓட்டை விழுந்துள்ளதால் தண்ணீர் குறைவாகவே கிடைக்கின்றது. மேலும் ஆழ்துளை கிணறு எண். 10–ல் மின் மோட்டார் பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பழுதுகளை சீரான குடிநீர் விநியோகத்தின் அவசியம் கருதி உடனடியாக சரி செய்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ. 47,000/–க்கும் நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 620 நாள் 28.07.2008–ல் ஒப்புதல் வழங்கியதன்பேரில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C. சந்திரசேகர் ஒப்பந்தக்காரர் – 0.03% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. 46547.00 )

2) திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் – 5.23% மதிப்பீட்டைவிட அதிகம். (ரூ. 49000. 00 )

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.03% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(ந.க.எண்.அ2/6455/2008)

**தீர்மானம் எண். 633 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணறு எண். 2–ல் இருந்து டேங்கர் லாரிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வருகிறது. தற்போதுள்ள நீரேற்றும் அமைப்பானது சுமார் 8 ஆண்டுகள் பழமையானது. இதனால் சம்மந்தப்பட்ட குழாயில் ஓட்டை விழுந்து நீர் வெளியேறுவதால் குடிநீர் லாரியில் நீரேற்றுவதற்கு கூடுதல் நேரம் ஆவதோடு குடிநீரும் வீணாகிறது. எனவே சம்ந்தப்பட்ட குழாயினை மாற்றி புதிதாக அமைப்பதற்கும், வால்வுகளை மாற்றுவதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ. 13,000/– க்கும், மன்றம் தனது தீர்மானம் எண். 613 நாள் 28.07.2008–ல் ஒப்புதலளிக்கப்பட்டதன் பேரில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.C. சந்திரசேகர் – 0.07% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் (ரூ. 12147.80)

2) திரு. பி.தங்கமணி, – 6.74% மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் (ரூ. 12975.00 )

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.07% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
(ந.க.எண்.அ2/6456/2008 )
**தீர்மானம் எண். 634 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட மாதாகாலனி பகுதியில் அமைந்துள்ள மூன்று பொதுக் கழிவறைகளிலும் தண்ணீர் தொட்டியில் தண்ணீர் ஏறவில்லை. இதைப்போல கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள பொதுக் கழிவறையிலும் தண்ணீர் தொட்டியில் தண்ணீர் ஏறவில்லை. மேற்படி பகுதிகளுக்கு செல்லும் தண்ணீர் குழாய்கள் அமைக்கப்பட்டு சுமார் 15 ஆண்டுகளுக்கு மேல் ஆகியுள்ளதால் சம்மந்தப்பட்ட இரும்புக் குழாயானது பல இடங்களிம் ஒட்டை விழுந்ததின் காரணமாக தண்ணீர் மேல்நிலை தொட்டியில் சரிவர ஏறவில்லை. எனவே சம்மந்தப்பட்ட பகுதிகளில் உள்ள பழுதடைந்துள்ள பைப்புகளை மாற்றி புதிதாக அமைப்பதற்கும், இதற்கான மதிப்பீடு ரூ. 24,000/–க்கும் மன்றம் தனது தீர்மானம் எண். 623 நாள் 28.07.2008–ல் ஒப்புதல் வழங்கியதின்பேரில் 19.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு.

1) திரு.C. சந்திரசேகர் – 0.11% மதிப்பீட்டைவிட குறைவு
ஒப்பந்தக்காரர் (ரூ. 23638.35 )

2) திரு. பி.தங்கமணி, – 2.12% மதிப்பீட்டைவிட அதிகம்.
ஒப்பந்தக்காரர் (ரூ. 24167. 50)

இதில் திரு.சி.சந்திரசேகர் என்பவர் 0.11 % மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சி.சந்திரசேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
(ந.க.எண்.அ2/6565/2008)
**தீர்மானம் எண். 635 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 7</u>**

குளச்சல் நகராட்சி கதவு எண். 5/54 எண் கொண்ட கட்டிடத்தில் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்பு நிரந்தரமாக துண்டிப்பு செய்யப்பட்டு மன்ற தீர்மான எண். 510, 31.03.2008–ன்படி குடிநீர் இணைப்பு ரத்து செய்யப்பட்டது. மனுதாரர் நிலுவையில் இருந்த வரி பாக்கித் தொகை முழுவதையும் செலுத்தி உள்ளார். எனவே மீண்டும் இணைப்பு வழங்கி வரி வசூல் செய்திட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.
**<u>அ.குறிப்பு</u>** : மீள இணைப்பு வழங்க அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.அ1/2042/2007 )
**தீர்மானம் எண். 636 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 8</u>**

**குளச்சல் நகர்மன்றத்தின் 18–வது வார்டு உறுப்பினர் கொண்டுவரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சி சார்பில் குளச்சல் அண்ணா சிலை சமீபம் பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தில் ஒரு கலையரங்கம் அமைத்து நகராட்சி வருமானத்தை பெருக்க மன்றம் தீர்மானிக்கலாம்.
**அ.குறிப்பு** : வருவாய் தரக்கூடிய இனம் என்பதால் மன்றம் பரிசீலிக்கலாம்.
**தீர்மானம் எண். 637 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 ஆகஸ்ட் திங்கள் 29–ாம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண். 1**

நகர்மன்ற தீர்மானம் எண். 548 நாள் 12.05.2008–ல் நகராட்சி வளாகத்தினுள் பட்டுப்போன மரத்தினை பொது ஏலம் மூலம் அப்புறப்படுத்த ஒப்புதலளிக்கப்பட்டதன் பேரில் 27.08.2008 அன்று பொது ஏலம் விடப்பட்டதின் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண். | பெயர் | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ. |
|---|---|---|
| 1 | திரு.எம். வேலப்பன்,<br>29/118, பள்ளிவிளாகம்,<br>குளச்சல். | 235/– |
| 2 | திரு. சந்திரசேகர்,<br>18/92.எ.கறுக்கன்குழி,<br>திக்கணங்கோடு. | 230/– |

இதில் திரு.எம். வேலப்பன் என்பவர் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வியாக ரூ. 235/– க்கு கேட்டுள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.எம்.வேலப்பன் என்பவரின் ஏலக் கேள்வியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 638 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2008–2009) –ன்கீழ் ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி தொடர்பான விபரங்கள் நகர்மன்ற தீர்மானம் எண்.626 நாள் 31.07.2008–ல் பதிவு செய்யப்பட்டதின் அடிப்படையில் 26.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.பி. ஜெயராஜ், ஒப்பந்தக்காரர் – 0.06% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. 1,99,645.75)

2) திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் – 7.00% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ. 2,13,740. 00)

இதில் திரு.பி. ஜெயராஜ், என்பவர் 0.06% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.பி. ஜெயராஜ், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 639 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் எண். வ2/54572/07–ன்படி, இரண்டாவது மாநில நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.2.95 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணி விபரம் நகர்மன்ற தீர்மானம் எண். 618 நாள் 28.07.2008 –ல் பதிவு செய்யப்பட்டது. அதன்பேரில் 26.08.2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு :

1) திரு.எஸ்.முகம்மது அப்துல்காதர், ஒப்பந்தக்காரர் – 0.004% மதிப்பீட்டைவிட குறைவு (ரூ. 2,93,581.05)

2) திரு. பி.தங்கமணி, ஒப்பந்தக்காரர் – 6.20% மதிப்பீட்டைவிட அதிகம் (ரூ. 3,11,809.00)

இதில் திரு.எஸ்.முகம்மது அப்துல்காதர், என்பவர் 0.004% மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். விபரம் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.முகம்மது அப்துல்காதர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புதல் செய்யலாம்.

**தீர்மானம் எண். 640 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் குடிநீர் நீரேற்றும் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோகம் செல்லும் குழாய்கள் இவற்றில் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தடைபடுகிறது. தினசரி குடிநீர் வழங்கி வருவதின் காரணமாக உடனுக்குடன் சம்மந்தப்பட்ட பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் ஏற்பட்டுள்ள பகுதுகளை உடனடியாக சரி செய்வதற்கும், இதற்கென தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 42,000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

பணியின் விபரம்

1) ஏசுதாஸ் காலனியில் 4” குடிநீரேற்றும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
2) சாம்பசிவபுரம் அருகில் 4” குடிநீரேற்றும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
3) துறைமுகத்தெருவில் 1–ம் எண் பகுதியில் குடிநீர் விநியோகக் குழாய் பழுதடைந்து உள்ளது.
4) கள்ளியடைப்பு பகுதியில் கதவு எண். 1/35.சி1 வீட்டின் அருகில் குடிநீர் விநியோகக் குழாய் பழுதடைந்துள்ளது.
5) சாயக்காரக்குடி பாலம் அருகில் குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது..
6) பர்னட்டிவிளை பகுதியில் க.எண். 2/109 எண் வீட்டின் அருகில் குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது..
7) அண்ணாசிலை அருகாமை ஆறுமுகா விடுதி அருகில் 6” குடிநீரேற்றும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
8) குளச்சல் மெயின்ரோடு மத்திய கூட்டுறவு வங்கி அருகில் குடிநீரேற்றும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
9) சிங்காரவேலர் காலனியில் 3” குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
10) புதுத்தெருவிற்கு செல்லும் சாலையின் முகப்பில் டாலியா பெண்கள் அழகு நிலையம் அருகில் 3” குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
11) இலப்பவிளை திருப்பில் டி–ஜாயின்ட் உடைந்துள்ளதை சரி செய்ய வேண்டியுள்ளது.
12) முகைதீன் பள்ளியின் அருகாமையில் அமைந்துள்ள பொதுக் குழாய் பழுதடைந்துள்ளதால் அதனை சரி செய்ய வேண்டியுள்ளது.
13) துறைமுகத் தெருவில் கதவு எண். 14/71 வீட்டின் அருகில் பொதுக் குழாய் பழுதடைந்துள்ளது.
14) அரசு மருத்துவமனை அருகில் 5” குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
15) குளச்சல் பீச் ரோட்டில் மார்ஜின் ப்ரி மார்க்கெட் கடை அருகாமையில் 5” குடிநீர் விநியோகக் குழாயில் டி–ஜாயின்ட் உடைந்துள்ளதை மாற்ற வேண்டியுள்ளது.
16) கொட்டில்பாடு செயின்ட் அலெக்ஸ் சர்ச் அருகில் 2” குடிநீர் விநியோகக் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது. அதனை சரி செய்ய வேண்டியுள்ளது.
17) கே.எஸ்.எஸ்.எஸ்.காலனியில் குடிநீர் விநியோக குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
18) குளச்சல் பீச் ஜங்சனில் ஜி.ஐ. குடிநீர் விநியோக குழாய் பழுது ஏற்பட்டுள்ளது.
19) சாம்பசிவபுரம் பொது கழிவறைக்கு செல்லும் குழாயில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
20) கே.எஸ்.எஸ்.எஸ். காலனியில் 2 “ கேட் வால்வு பொருத்த வேண்டியுள்ளது.

**அ.குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/7722/08)

**தீர்மானம் எண். 641 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் உபயோகப்படுத்தப்பட்டு பழுதடைந்த மின்சாதனப் பொருட்களை 26.08.2008 அன்று பொது ஏலம் விடப்பட்டதின் விபரம் கீழ்க்கண்டவாறு

| வ. எண் | பொருள் விபரம் | ஏலக்கேள்வி விபரம் | | | உச்ச ஏலக்கேள்விதாரர் பெயர் |
|---|---|---|---|---|---|
| | | திரு.ஐயப்பன் | திரு. சசி | திரு.ஷாஜகான் | |
| 1 | 40 வால்ட் குழல் விளக்கு (ஒன்றிற்கு) | 3/– | ஏலக்கேள்வி இல்லை | 2.80 | திரு.ஐயப்பன் 26/88.அழகனார்கோட்டைவிளை, குளச்சல். |
| 2 | 40வால்ட் சோக் (ஒன்றிற்)கு) | 20/– | “ | 21/– | திரு. ஷாஜகான், 30/53.பி, பி.எஸ்.புரம், குளச்சல். |
| 3 | ஸ்டாா்ட்டா் (ஒன்றிற்)கு) | ஏலக்கேள்வி இல்லை | ஏலக்கேள்வி இல்லை | 5 காசுகள் | திரு. ஷாஜகான், 30/53.பி, பி.எஸ்.புரம், குளச்சல். |
| 4 | 250W.S.V. சோக் (ஒன்றிற்கு) | 75/– | ஏலக்கேள்வி இல்லை | 80/– | திரு. ஷாஜகான், 30/53.பி, பி.எஸ்.புரம், குளச்சல். |
| 5 | இதர பொருட்கள் | கேள்வி இல்லை | கேள்வி இல்லை | 260/– | திரு.ஐயப்பன் 26/88.அழகனார்கோட்டைவிளை, குளச்சல். |

**அ.குறிப்பு** : (1) வ.எண்.(1) மற்றும் (5 )–க்கான உச்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.ஐயப்பன் என்பவரின் உச்ச ஏலக் கேள்வியை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

(2) வ.எண். (2), (3), (4) ஆகியவற்றின் உச்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. ஷாஜகான் என்பவரின் உச்ச ஏலக் கேள்வியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 642 : அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகளை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது அலுவலகம் வழியாக 15 தினக்கூலி பணியாளர்கள் 20.12.2005 முதல் 15.09.2007 முடிய அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி காலத்திற்கான ஊதியத் தொகையும் வழங்கப்பட்டது. முன்னாள் மாவட்ட ஆட்சியரால் அளித்த வாய்மொழி உத்தரவின்பேரில் இப்பணியிடங்கள் தொடரப்பட்டு வந்தது. அப்போது மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்திலிருந்து 10.12.2007–ல் இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் 15 தினக்கூலி சுகாதாரப் பணியிடங்கள் தொடர வேண்டிய அவசியம் இருப்பின் அதற்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இப்பணியிடங்களின் சேவை இந்நகராட்சிக்குட்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியிலும், இந்நகரின் தூய்மைக்கு அத்தியாவசிய இன்றியமையாத தேவையாக இருப்பதால் இப்பணியிடங்களை 31.05.2008 வரை நீட்டிப்பு செய்து ஊதியம் வழங்க மன்றம் தனது தீர்மானம் எண். 508 நாள் 31.03.2008–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. காலியாக இருந்ததில் தற்போது 4 துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்காண் பணியிடங்களை தொடர்ந்து நீட்டித்தால் தணிக்கைத் தடை எழக்கூடும். இதனால் நிர்வாக சிக்கல் எழக்கூடும். மேலும் நகராட்சியின் பொது நிதியும் போதிய திருப்திகரமானதாக இல்லை. எனவே 31.08.2008–க்கு பின் இப்பணியிடங்கள் நீட்டிக்க இயலாது என்பதால் 31.08.2008 வுடன் முடிக்கலாம்.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 643 : அரசு விதிகளின்படி குளச்சல் நகராட்சிக்கு கூடுதலாக 22 துப்புரவு பணியிடங்கள் அனுமதிக்கப்படுவதற்கு முறைப்படி விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. 2004 சுனாமி பேரிடரின்போது மிகப்பெரிய அளவிலான இழப்பினை குளச்சல் நகராட்சி சந்தித்தபோது சுகாதாரப்பணிகள் நகராட்சிக்கு ஒரு சவாலாகவே இருந்து வருகிறது. இந்நிலையில் மாவட்ட ஆட்சியர் சுனாமி நிதியிலிருந்து, தினக்கூலி அடிப்படையில் சுகாதாரப்பணிகளை மேற்கொண்டிட குளச்சல் நகராட்சிக்கு 15 நபர்களை பணி நியமனம் செய்திட அனுமதியளித்தார்கள். பின்னர் மாவட்ட ஆட்சியரின் 10.12.07 நாளைய உத்தரவின்படி நகராட்சி நிதியிலிருந்து இந்நாள்வரைக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது. 4 துப்புரவு பணியாளர் காலியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. தினக்கூலி சுகாதாரப்பணியாளர் எண்ணிக்கை 10 ஆக குறைவு செய்யப்பட்டது. குப்பைத் தொட்டி இல்லாத குளச்சல் நகரம் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் சூழலில் தினக்கூலி துப்புரவு பணியாளர்களை நிறுத்தினால் சுகாதாரப்பணிகள் கடுமையாகப்பாதிக்கப்படும். எனவே கூடுதல் துப்புரவு பணியிடங்களின் அனுமதிக்கான அரசு உத்தரவினை எதிர்பார்த்து மேற்படி 10 தினக்கூலி பணியாளர்களை 30.11.08 வரைக்கும் பொது நிதி சம்பளம் மூலம் தொடர்ந்து பணியில் அமர்த்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுனாமி திட்டப் பணிகளின் 2–வது கட்ட பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட இடங்களில் மழைநீர் வடிகால், சிமெண்ட் தளம் மற்றும் சிறுபாலங்கள் ஆகிய பணிகள் செய்திட கீழ்கண்ட விபரப்படி உத்தேச மதிப்பீடுகள் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சாஸ்தாங்கரை மெயின்ரோடு, டி.பி.ஜங்சன் முதல் வெள்ளியாகுளம் கரை வரை கிழக்கு பக்கம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 58.00 |
| 2 | சாஸ்தாங்கரை மெயின்ரோடு, டி.பி.ஜங்சன் முதல் வெள்ளியாகுளம் கரை வரை மேற்கு பக்கம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 58.00 |
| 3 | திருவள்ளுவர் சாலை, வி.கே.பி. மெயின் ரோடு முதல் வெள்ளியாகுளம் கரை வரை இரண்டு பக்கமும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 105.00 |
| 4 | குளச்சல் பரசேரி சாலை – காந்தி ஜங்சன் முதல் வி.கே.பி. பள்ளி வரை தெற்கு பக்கம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி. | 72.00 |
| 5 | குளச்சல் பரசேரி சாலை – காந்தி ஜங்சன் முதல் வி.கே.பி. பள்ளி வரை வடக்கு பக்கம் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி | 60.00 |
| 6 | அண்ணாசிலை முதல் சன்னதி தெரு வரை சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 10.00 |
| 7 | ஆசாரிமார் தெரு முதல் வெள்ளிப்பிள்ளையார் கோயில் தெரு முடிய ஒரு புறம் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 15.00 |
| 8 | பாலத்தன்கரை முதல் வெள்ளிப்பிள்ளையார் கோயில் முடிய சிமெண்ட் தளம் அமைக்கும் பணி. | 10.00 |
| 9 | சாஸ்தாங்கரை திருவள்ளுவர் சாலை இணைப்பு தெரு சிமெண்ட் தளம் மற்றும் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 16.00 |
| 10 | வெள்ளியாகுளம் சிவன்கோயில் அருகில் பாலம் அமைக்கும் பணி. | 20.00 |
| 11 | வெள்ளியாகுளம் வயல்வெளி சாலையில் சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 41.00 |
| 12 | சிங்கன்காவு கிணறு முதல் நரிக்கல் வரை சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 25.00 |
| 13 | சாஸ்தாங்கரை அரசு தொடக்கப்பள்ளி அருகில் சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 3.00 |
| 14 | ஒற்றைக்கண்பாலம் முதல் நரிக்கல் வரை மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 33.00 |
| 15 | புல்லன்விளையில் சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 25.00 |
| 16 | பாலத்தன்கரை ரோடு முதல் சீம்பிளிவிளை வரை சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 11.00 |
| 17 | காமராஜர் சாலையில் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி | 18.00 |
| 18 | நரிக்கல் முதல் பஸ் நிலையம் வரை மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி | 11.00 |
| 19 | நூலகம் முதல் சந்தை வரையிலான சாலையில் சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 7.00 |
| 20 | அழகனார்கோட்டை விளையில் சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 10.00 |
| 21 | களிமார் பாலம் முதல் வாய்க்கால் தெரு வரை சிமெண்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 50.00 |
| 22 | நெசவாளர் வடக்கு தெரு மற்றும் குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி. | 5.50 |
| 23 | வாய்க்கால் தெரு மற்றும் மூன்று குறுக்கு தெருக்களில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி. | 6.00 |

| | | |
|---|---|---|
| 24 | ஈழக்காணிவிளை தெருவில் சிமென்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 7.00 |
| 25 | மாதாகாலனி தெருக்களில் சிமென்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 20.00 |
| 26 | வான்மலர் காலனியில் சிமென்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 5.50 |
| 27 | ஆசாத்நகரில் சிமென்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 8.00 |
| 28 | ஆசாரிமார் தெரு மேற்கு தெருக்களில் சிமென்ட் தளம் அமைத்து மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. | 17.00 |
| 29 | கொட்டில்பாடு முதல் பெரியநாயகி காலனி வரை ஏ.வி.எம். கால்வாய் மழைநீர் வடிகால் ஓடை அமைக்கும் பணி. ( 964 மீட்டர்) | 74.00 |
| | **மொத்தம்** | **801.00** |

**அ.குறிப்பு :** சுனாமி திட்டத்தின் மூலம் இரண்டாம் கட்ட பணிகள் செய்ய ஏற்கெனவே இவ்வலுவலகம் மூலம் ரூ. 169.70 இலட்சங்களுக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதற்கு நகர்மன்ற தீர்மானம் எண். 545 நாள் 12.05.2008 –ன் மூலம் அனுமதி அளித்ததன் அடிப்படையில் இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண்.4075/2008/அ2 நாள் 13.05.2008–ன்மூலம் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு மேலனுப்பப்பட்டு நிலுவையில் உள்ளது. இந்நிலையில் தற்போதும் இரண்டாம் கட்ட பணிகள் செய்ய ரூ.801.00 இலட்சங்களுக்கு மதிப்பீடு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

**தீர்மானம் எண். 644 : 30–வது வரிசை எண்ணாக கீழ்குறிப்பிட்டுள்ள வேலையினையும் சேர்த்திட தீர்மானிக்கப்பட்டது.**

**நரிக்கல் சந்திப்பு முதல் களிமார் பாலம் வரைக்கும் அணுகுசாலை அமைத்திட மதிப்பீட்டு தொகை ரூ. 36.2 லட்சம்.**

TEAP **இரண்டாம் கட்டப் பணிகளுக்கான முதல் பட்டியல் ரூ. 169.7 லட்சம் மதிப்பீட்டில் அலுவலகக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளவாறு ஏற்கெனவே நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இப்போது கூடுதலாக ரூ.837.2 லட்சங்களுக்கு பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள 30 வேலைகளை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக் கொள்ளவும், மேற்படி வேலைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை நகராட்சி நிர்வாக ஆணையாளர் மேற்கொள்ளக் கேட்டும் மன்றத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி